*கவனிக்க.- 2022.07.01 ஆந் திகதிய 2287 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழி மூலம் ) பகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2288 - 2022 ජූලි මස 08 වැනි සිකුරාදා - 2022.07.08

*2288 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1022 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | |


**கவனிக்க.-** (i) சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு சட்டமூலம் 2022, யூன் மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2022, யூன் மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) கைத்தொழில் பிணக்குகள் (திருத்தம்) சட்டமூலம் 2022, யூன் மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2022, யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூலை மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1021 - B82362 - 5403 (2022/07)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## திக்வெல்ல பிரதேச சபை

அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தல்

*திக்வெல்ல பிரதேச சபை மூலம் 2022ஆம் வருடம் பெப்புருவரி 22 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 5:1:7 இன் கீழ், கீழ்க் குறிப்பிடப்படும் பிரேரணை சபை அங்கீகாரம் பெற்றது என்பதனைப் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.*

*கித்ஸர முதுகுமாரன,*
*தலைவர்.*
*திக்வெல்ல பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*திக்வெல்ல.*
*2022.04.18.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திக்வெல்ல பிரதேச சபைக்கு உரித்தான கீழ்க் குறிப்பிடப்படுகின்ற A முதல் G வரை பிரதேசங்கள் அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக பிரகடனப்படுத்தல் உசிதமென பிரேரணை செய்யப்பட்டது.*

**A பிரதேசம்**
*வலஸ்கல குமார ஸ்டோர்ஸ் சந்தி முதல் மாத்தறை நோக்கி ரதம்பல சந்தி வரை 4.2 கி.மீ. தூரமான திக்வெல்ல ரதம்பல ஊடாக மாத்தறை பிரதான பாதையின் மத்திய ரேகையிலிருந்து கிழக்கு, மேற்கிற்கும் 100 மீற்றர் வரை அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக்கள் உட்பட்ட நிலப்பிரதேசம் அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கும்,*

**B பிரதேசம்**
*பதீகம வைத்தியசாலை சந்தி முதல் மாத்தறை நோக்கி பெலிவத்த ஸீதகல்ல (பிரதேச சபை எல்லை) வரை 6.940 கி.மீ. தூரமான திக்வெல்ல மாத்தறை பிரதான பாதையில் மத்தியிலிருந்து தெற்கிலும், வடக்கிலும் 100 மீற்றர் வரை அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக்கள் உட்பட்ட நிலப்பிரதேசம் அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கும்,*

**C பிரதேசம்**
*தொடம்பகல லஹரு அரிசி ஆலை முதல் தங்காலை நோக்கி நில்வெல்ல சந்தி (பிரதேச சபை எல்லை) வரை 3.01 கி.மீ. தூரமான திக்வெல்ல மஹவெல ஊடாக தங்காலை பிரதான பாதையின் மத்திய ரேகையிலிருந்து வடக்கிற்கும் தெற்கிற்கும் 100 மீற்றர் வரை அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக்கள் உட்பட்ட நிலப்பிரதேசம் அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கும்,*

**D பிரதேசம்**
*நில்வெல்ல ஓக்கிட் விலா சுற்றுலா தங்குவிடுதி முதல் நில்வெல்ல நோக்கி துறைமுக சந்தி வரை 1.550 கி.மீ. தூரமான திக்வெல்ல நிலவெல்ல பாதையின் மத்திய ரேகையிலிருந்து வட மேற்கிற்கும் தென் கிழக்கிற்கும் 100 மீற்றர் வரை அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக்கள் உட்பட்ட நிலப்பிரதேசம் அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கும்,*

**E பிரதேசம்**
*வெலிஹிடிய சிரிசுமன மாவத்தை தற்போது வரிப்பணம் அமுல்படுத்தப்படும் எல்லை முதல் (புத்தர் சிலைக்கு அருகாமையிலிருந்து) அலுத்கொட நோக்கி சியம்பலாகஹ சந்தி வரை 1 கி.மீ. தூரமான வெலிஹிடிய அலுத்கொட பாதையின் மத்திய ரேகையிலிருந்து வடக்கிலும் கிழக்கிலுமாக 100 மீற்றர் வரை அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக்கள் உட்பட்ட நிலப்பிரதேசம் அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கும்,*

**F பிரதேசம்**
*மாறை/மெதோதிஸ்த வித்தியாலயம் சந்தி முதல் கடற்கரை நோக்கி 750 மீற்றர தூரமான திக்வெல்ல ஹிரிகெட்டிய பாதையின் மத்திய ரேகையிலிருந்து வடக்கிலும் தெற்கிலும் 100 மீறறர் வரை அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக்கள் உட்பட்ட நிலப்பிரதேசம் அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கும்,*

**G பிரதேசம்**
*பெஹம்பிய பாதை, த வர்ஸ் சுற்றுலா ஓய்வு விடுதி முதல் கடற்கரை நோக்கி 1.120 கி.மீ. தூரமான திக்வெல்ல பெஹம்பிய பாதையின் மத்திய ரேகையிலிருந்து வடகிழக்கிற்கும் தென்மேற்கிலும் 100 மீற்றர வரை அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக்கள் உட்பட்ட நிலப்பிரதேசம் அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தல்.*

*07-74*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.